09.02.2026

O.S.No. 88/2023

DW1–முருகன் – த/பெ. சுந்தரம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.02.2026

குறுக்கு விசாரணை : ( வாதி தரப்பில்)

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வாதி எனது சித்தப்பாவார். நான் விவசாயம் மற்றும் கூலிவேலை செய்துவருகிறேன். வாதியுடன் உடன்பிறந்தவர்கள் மொத்தம் 6 பேர். கற்பூதபாண்டியன், சுந்தரம், ராமசாமி பாண்டியன், மகாலிங்கம், சண்முகசுந்தரம் மற்றும் ராமசாமி ஆகியோர்கள்.

2. பிரதிவாதியின் தந்தை, அவரது சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினையில் எந்தெந்த சொத்துக்கள், எந்தெந்த சர்வே எண்ணில் ஒதுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. எனது தந்தை சுந்தரத்திற்கு ஒதுக்கிய சொத்துக்கள் தெரியும், ஆனால் புல எண் மற்றும் அளவுகள் தெரியாது.

3. யார் யாருக்கு ஒதுக்கப்பட்டதோ அதன்படி தீர்வை செலுத்துகிறார்கள் என்றால் சரிதான். என் தாத்தா உயிருடன் இருக்கும்போதே பாகப்பிரிவினை நடைபெற்று சொத்துக்கள் அனுபவம் ஒப்படைக்கப்பட்டு அவரவர்கள் பாகத்திற்கு தீர்வை செலுத்திவருகிறார்கள். எனது தந்தை உயிருடன் இருந்த சமயத்தில் தீர்வை செலுத்தினாரா என்றால் செலுத்தினார், ஆனால் அதன் ரசீதுகள் எதுவும் என் கைவசம் இல்லை.

4. என் உடன்பிறந்தவர்கள் மொத்தம் என்னையும் சேர்த்து 3 பேர். 2 பெண்பிள்ளை மற்றும் நான். வாதி தாக்கல் செய்துள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது, ஆனால் சொத்தை அடையாளம் காட்டமுடியும். பிராது தபசில் சொத்து வடக்கு திசையில் யார் இடம் இருந்தது என்றால் பால்துரை நாடார் இடம் இருந்தது. தென்திசையில் பொது வாய்க்கால் உள்ளது. வாய்க்காலுக்கு தென்புறம் குத்தாலிங்கம் இடம் உள்ளது.

5. எனது தந்தையின் மூத்த அண்ணன் கற்பூதபாண்டியன். வழக்கு சொத்திற்கு தென்புறம் கற்பூதபாண்டியன் இடம் உள்ளது என்றால் சரிதான். தற்போது அந்த இடத்தை தங்கப்பாண்டி கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தங்கப்பாண்டி இடத்திற்கு வடக்கில் மகாலிங்க நாடார் புஞ்சை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உள்ளது. தங்கப்பாண்டியின் கிரையப்பத்திரம் 2021ல் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். அதைபோல் பிராதுதபசில் சொத்திற்கு தென்புறம் திருமேனிபாண்டியன், அருணாசலம், ஹரிச்சந்திரன் இடங்கள் உள்ளது என்றால் சரியல்ல, தென்புறம் வாய்க்கால் தான் உள்ளது. மேற்படி ஆவணத்தில் தெற்கு எல்லையாக மகாலிங்கம் புஞ்சை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினை நீதிமன்றம் மூலம் நடைபெற்றது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

6. வழக்கு சொத்திற்கு கீழ்பகுதியில் பொது வாய்க்கால் உள்ளது. வாய்க்காலுக்கு கீழ்பகுதி ராமசாமிபாண்டியன், சண்முகசுந்தரம் இடம் உள்ளது. வழக்கு சொத்திற்கு கீழ்பகுதியில் கிணறு உள்ளது என்றால்

சரியல்ல. மேற்படி கிணறு சர்வே எண்.531/1இ –ல்அமைந்துள்ளது என்றால் சரியல்ல, வாய்க்கால் தான் உள்ளது.

7. பிராது தபசில் சொத்திற்கு வாதி தீர்வை செலுத்திவருகிறார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் வழக்கு சொத்திற்கான தீர்வை ரசீது என்றால் அது சரியல்ல. நான் பிராது தபசில் சொத்து எனது அனுபவத்தில் இருப்பது என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். நான் எனது தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. வாதி அனுபவம் செய்து வரும் இடத்திற்கு சுற்றியுள்ள எல்கைமால்கள் அனைத்தும் மகாலிங்கம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறாக உள்ளது. என்னை வெளியேற்றம் செய்யவேண்டும் என்ற காரணத்தினால் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

9. எனது பெயரில் உள்ள பட்டாவில் யார் யார் பெயர் உள்ளது என்றால் எனது தந்தை பெயரும், என் பெயரும், எனது தாத்தாவின் பெயரும் இருக்கும். எனது தந்தை எனக்கு எந்த ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். பட்டா மட்டுமே உள்ளது. நான் கூறும் பட்டாவில் எனது சகோதரிகள் பெயர் இல்லை. தவறுதலாக தான் எனது பெயர் ஏற்பட்டுள்ளது, வாரிசு அடிப்படையில் இருந்திருந்தால் எனது சகோதரிகளின் பெயரும் சேர்ந்திருக்கும் என்றால் சரியல்ல.

10. பிராது தபசில் சொத்தில் மகாலிங்கம் தான் விவசாயம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவம் செய்துவருகிறேன். நான்தான் பிராது தபசில் சொத்தை அனுபவம் செய்துவருவதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாதி மீது பாவூர்சத்திரம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை, வாதி தான் என் மீது கொடுத்தார். அதற்கு அவர்கள் நீதிமன்றம் மூலம் பார்த்துக்கொள்ளுங்கள் என கூறிவிட்டனர். நான் காவல்நிலையத்தில் வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யமாட்டேன் என கூறினேன் என்றால் சரியல்ல.

11. பிராதுதபசில் சொத்தை வாதிதான் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. எனது எதிருரையில் வாதி வருவாய் துறையில் தாக்கல் செய்த பல்வேறு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டது என்று நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வாதியின் மனுக்கள் அனைத்தும் விசாரணையின்றி முடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனவே பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி